WATCHLIST ON CHILDREN AND ARMED CONFLICT



Watchlist

# பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை:
## இலங்கையில் உக்கிரமடையும் ஆயுத மோதல்களும் சிறார்களும்

கடந்த இரு தசாப்தங்களாக 67,000 பேருக்குமேல் கொல்லப்படுவதற்கும் இலங்கையின் மொத்த மக்களுக்கும் சொல்லொணா துன்பங்களை ஏற்படுத்திவரும் மிகக் கொடிய ஆயுத மொதல்களுக்குள் இலங்கையின் பெருமளவு சிறார்களும் பலவந்தமாக இழுத்துவிடப் பட்டிருக்கின்றனர். இலங்கை அரசாங்கத்தினாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினாலும், அதிலிருந்து பிரிந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (கருணா குழுவினர்) போன்ற அமப்புகளினாலும் பெருமளவில் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுவதால், நாடு பூராகவுமே தொடர்ச்சியான ஒருவித அச்சம் நிறைந்த சூழலும் பாதுகாப்பற்ற உணர்வுகளுமே உருவாக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம், புலிகள் இயக்கம் ஆகிய இரண்டுமே, வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், வன்னிப் பிரதேசத்திற்கும் - கிழக்கே அதி பாதுகாப்பு வலயம் என அரசாங்கம் அறிவித்திருக்கும் பிரதேசங்களுக்கும் அவசியமான மிக அத்தியாவசிய மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளுக்குகூட கட்டுப்பாடுகளை விதித்துள்ளன, அல்லது அவற்றைத் தடுத்துள்ளன. மிக கணிசமானளவு நிர்வாக மற்றும் அதிகாரத்துவ ரீதியான தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளதற்கும் மேலாக, நிவாரண மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் உயிர் காக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில்கூட, அவர்கள் தொடர்ச்சியாக தொந்தரவுகளுக்கும் அச்சறுத்தல்களுக்கும் உட்படுத்தப்படுவதோடு சில வேளைகளில் கொல்லப்பட்டும் உள்ளனர். இதற்கும் மேலாக, பொதுமக்கள் பாதுகாப்புத் தேடியும் உதவி தேடியும் தப்பிச் செல்லும் நிலமைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது, மற்றும் சாதாரண மக்களின் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகளை விதிப்பது எனபவற்றின் மூலம் மானிட ரீதியான பாரிய சிக்கலொன்றை அதிகரிக்கச் செய்துள்ளனர். குற்றவாளிகள் எந்த விதமான தண்டனைகளுமின்றி சிறார்களுக்கு எதிராகவும் சாதாரண சிவிலியன்களுக்கு எதிராகவும் அத்துமீறல்களில் ஈடுபடுகின்றனர். நோர்டிக் நாடுகளின் தலைமையிலான இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) வெளயேறியதும், அண்மையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதுமான இன்றைய சூழ் நிலையில் சுதந்திரமான கண்காணிபு பணியொன்று நிறுவப்பட வேண்டியது என்றுமில்லாதவாறு அவசியமாகியுள்ளது.

இலங்கை முழுவதும் பரவலாகவே சிறார்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்புகளுக்கு எதிரான வன்முறைகளும் அத்துமீறல்களும் பல்லேறு வகைகளில், பல்வேறு ஆயுதமேந்திய குழுக்களாலும் சக்திகளாலும் நடத்தப்படுகின்றன. பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை: இலங்கையில் அதிகரித்து வரும் ஆயுத மோதல்களும் சிறார்களும். என்னும் அறிக்கையில், இலங்கையில் சிறார்களைப் பாதுகாப்பதற்காக அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும், நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகளையும் வொச்லிஸட் (Watchlist) வழங்கியுள்ளது.

வொச்லிஸ்ட அமைப்புத் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் குறிப்பான அறிக்கைகளைப் பெறுவதற்கும், குறிப்பான மோதல் நிலைமைகளில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் தயவு செய்து தொடர்பு கொள்க: watchlist@womenscommission.org

ஏப்ரல் 2008



UNICEF/HQ06-1599/Shehzad Noorani



Watchlist



UNICEF/HQ06-1594/Shehzad Noorani

## அகதிகளும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரும்

2006 எப்ரல் முதல் 2007 ஏப்ரல் வரையான காலத்தில் மீண்டும் மிக வன்முறையான மோதல்கள் மீள ஆரம்பித்த பின்னர் இலங்கைக்குள்ளேயே 3,000,000 பேர் இடம் பெயர்ந்துள்ளதோடு 20,000 பேர்வரை பாதுகாப்புத் தேடி இந்தியாவிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். 2006 ஏப்ரலுக்கு முன்னர் அண்ணளவாக அரை மில்லியன் மக்கள் இலங்கையில் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்த இச்சனத்தொகையில் சுமார். 39வீதமான சிறார்களும் உள்ளடங்குகின்றனர்.

இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மிகக் குறைவான மருத்துவ வசதிகளுடனும், போதிய மலசலகூட வசதிகள் இல்லாமலும் அல்லல்படுவதோடு, இடம்பெயர்ந்து வாழும் முகாம்களிலும் மற்றும் இடம்பெயர்ந்த இடங்களில் ஆதரவு வழங்கும் குடும்பங்களிடமிருந்தும் போதிய உணவு வசதிகள் கிடைக்ககாமை போன்ற பிரைச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர். முகாம்களுக்குள்ளும் வெளியேயும் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாமையால் சிறார்கள் கடத்தப்படுவது, பலவந்தமாக ஆயுதப்படைகளில் சேர்க்கப்படுவது மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவது போன்றவற்றிக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இடம்பெயர்ந்தோர் வாழும் சில முகாம்கள் இராணுவத் தாக்குதல்களின் நேரடி இலக்குகளாக மாறியுள்ளன. அதைப்போலவே இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளும் இத்தகைய மோசமான நிலைமைகளிலேயே வாழுகின்றனர். இந்திய அரசாங்கம் மிகக் குறைந்தளவு வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும், பெரும்பாலான அகதிகள் 1980, 1990 களில் காலாவதியாகிப்போன பழைய உட்கட்டுமான வசதிகளடங்கிய முகாம்களிலேயே வாழுகின்றனர். இதற்கும் மேலாக, முகாம்களுக்கு வெளியே வாழும் 23,000 அகதிகள் எந்தவிதமான நிவாரணங்களும் பெறத் தகுதியற்றவர்களாக வாழுகின்றனர்.

இலங்கையில் சில சிறார்கள், உள்நாட்டில் இடம் பெயர்ந்த வாழ்க்கை முறை அல்லது அகதி வாழ்க்கை முறை என்ற சூழலுக்குள்ளேயே அடைபட்டு வளர்ந்து வருகின்றனர். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பது முன்னுரிமை கொடுத்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய விடயமாகும். ஆனால் அண்மையில் இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானோரை மீளவும் பாதுகாப்பற்ற பிரதேசங்களான தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழுமாறு இலங்கை அரசாங்கம் கட்டாயப்படுத்துகின்றது. நிலைமைகள் சுமுகமடைவதற்கு முன்னரே அந்த மக்கள் அரசாங்கத்தினால் பலாத்காரமாக அங்கு அனுப்பப்படுவதாகவே பல மனிதாபிமான அமைப்புக்களால் கருதப்படுகின்றது. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பாக தெளிவான நிலைப்பாடோ திட்டங்களோ செயற்படுத்தப்படாததால் அது இனத்துவ அடிப்படையில் பல சமுகக் குழுக்களிடையே ஒருவித கொந்தளிப்பான நிலைமைகளை உருவாக்கியுள்ளது.

## உடல் நலன்

ஆயுத மோதல்கள், இடப்பெயர்வுகள் உட்பட மனிதாபிமான நிவாரணங்கள் கொண்டுசெல்வதற்கான கட்டுப்பாடுகள் என்னும் காரணங்களினால் இலங்கையில் போஷாக்கின்மை மற்றும் நோய்கள் பரவுதல் போன்றவை அதிகரிக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கும் மேலதிகமாக, வடக்கு - கிழக்கில் பெரும்பாலான மருத்துவ வசதிகள் சேதமாக்கப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட வடக்கு கிழக்கில் இன்னும் ஐந்து மாவட்டங்களில் பாரிய உணவுத் தட்டுப்பாடு மற்றும் வாழ்வியல் பிரச்சினைகள் மோசமாக அதிகரித்து வருவதாக 2007ம் ஆண்டு ஏப்ரலில் உலக உணவுத்திட்ட அமைப்பு (World Food Program) எச்சரித்திருந்தது. ஆயுத மோதல்கள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமிருப்பதாலும் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் காரணமாகவும் சாதாரண மக்கள் தமது உயிர்ப் பாதுகாப்புக்கான மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலைமைகள் காரணமாக குறிப்பாக சிறார்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## எச்.ஐ.வி./எயிட்ஸ்

2005ம் ஆண்டு இறுதியில், UNAIDS நிறுவனத்தின் கணிப்பின்படி இலங்கையில் 15 வயதிற்கும் 49 வயதிற்கும் இடைப்பட்டவர்களில் 0.1 வீதத்தினருக்கு எச்.ஐ.வி. இருப்பதாக கணிக்கப்பட்டிருந்தது. அதேவேளை பாலியல் ரீதியான கையாடல்கள், பாதுகாப்பில்லாத பாலியல் நடைமுறைகள் மற்றும் இவ்விடயம் பற்றி போதிய புரிதல்கள் இல்லாததன் காரணமாக மக்களிடையே, குறிப்பாக வளர்ந்த பிள்ளைகளிடையே எயிட்ஸ் பரவ வாய்ப்பிருப்பதாக இலங்கை அரசாங்கமும் தேசிய மற்றும் சர்வதேசிய அமைப்புக்களும் எச்சரித்திருந்தன. மருத்துவக் கல்வித் துறையைச் சார்ந்து பணியாற்றுபவர்கள்கூட எச்.ஐ.வி./எயிட்ஸ் நோய் இருக்கும் நபர்களை ஒதுக்கி வைக்கும் நடைமுறையில் ஈடுபடுவதாகவும் தெரியவந்துள்ளது. ஆயுத மோதல்களும் அதனால் ஏற்பட்டுள்ள இடப்பெயர்வுகளும் வடக்கு கிழக்கில் எச்.ஐ.வி. பரவுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்திருக்கின்றன.

## கல்வி

இலங்கையின் ஆயுத மோதலானது பாடசாலைகளைக்கூட இராணுவத் தரிப்பிடங்களாகவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களாகவும், இராணுவ இலக்குகளாகவும் மாற்றியுள்ளது. 2006ம் ஆண்டில் மீண்டும் ஆயுத மோதல்கள் வெடித்ததன் காரணமாக இலங்கையில் 250,000 மேற்பட்ட மாணவர்கள், குறிப்பாக வடக்கு கிழக்கில் தமது கல்வியை இடை நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். 2006 செப்டெம்பர் வரை, இராணுவத் தாக்குதல்கள் காரணமாக 261 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன. போதிய பாதுகாப்பு நிலைமைகள் இல்லாமையினால் அவற்றை மீளச் சீரமைக்கும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து கடந்த வருடங்களில் மிகப் பெருந்தொகையில் கல்விசார் பணியாளர்கள் வெளியேறிச் சென்றதன் காரணமாகவும் வடக்கு கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மோதல்கள் நிகழும் பிரதேசங்களில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு போகாமல் விடும் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. குறிப்பாக இடம்பெயாந்த மாணவர்களிடையே இது மிக அதிகமாக காணப்படுகின்றது. ஒன்றில் நீண்ட காலம் பாடசாலைகளுக்கு செல்லாமையினால் அல்லது மோதல்கள் தொடர்பான நிலைமகளுக்கு முகம் கொடுத்ததனால் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களிடையே அதிக மன அழுத்த நிலைமைகள் காணப்படுவதோடு அது தொடர்பாக அதிக கவனமெடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

## பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள்

இலங்கையில் நிகழும் மோதல்களுடன் தொடர்புபட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் பற்றி பெருந்தொகையான தகவல்கள் இருக்கின்றன. ஆனால் பிரச்சினையின் தன்மை காரணமாகவும் அதன் தாற்பரியம் காரணமாகவும் அதுபற்றிய விபரங்களை மக்களை அணுகிப் பெறுவது சிரமமாகவே உள்ளது. எவ்வாறாயினும், மிகக் குறைவாக அங்குமிங்குமாக கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அங்கு நிலவுகின்ற உண்மையான நிலைமைகளை தெளிவாக பிரதிபலிக்கவில்லை என்றே கூறலாம். தொடர்ச்சியாக நிகழும் ஆயுத மோதல்களின் காரணமாக பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்தே இருக்கின்றன. ஆனாலும், பாதிப்புக்குள்ளான நபர்கள் ஒன்றில் தாங்கள் அவமானத்திற்கு உள்ளாகலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என அஞ்சுவதாலும், போதுமானதும் பொருத்தமானதுமான சட்ட, மருத்துவ மற்றும் சமூக சேவைகள் போன்றவற்றை பெறுவதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போனதாலும், இச்சம்பவங்கள் சரியாக அறிக்கையிடப்படவில்லை அல்லது ஒரு ஒழுங்கான விதத்தில் ஆவணப்படுத்தப் படவில்லை.

## யுத்தத்தின் விளைபொருளாக நிலக் கண்ணிகளும் வெடிமருந்துகளும்

2002ம் ஆண்டு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு முன்னர் புலிகள் இயக்கமும் இலங்கை அரசாங்கமும் நபர்களுக்கெதிராக பயன்படுத்தும் நிலக் கண்ணிகளை (antipersonnel mines) மிகப் பரவலாக பயன்படுத்தியுள்ளனர். வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சாதாரண பொதுமக்கள் வாழும் இடங்களுக்கு அருகாமையில் வைக்கப்பட்ட நிலக் கண்ணிகள் அப்பிரதேசங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்கு மேலதிகமான அச்சுறுத்தலாகவே அமைந்திருக்கின்றன.

பாதுகாப்புமில்லை தப்பவும் வழியில்லை: இலங்கையில் அதிகரித்து வரும் ஆயுத மோதல்களும் சிறார்களும்; என்னும் வொச்லிஸ்ட அமைப்பின் அறிக்கையினது சாராம்சமே இதுவாகும். அம் முழுமையான அறிக்கையில், பொதுவாக பகிரங்கமாக கிடைக்கக் கூடியதாக உள்ள இரண்டாம்பட்ச தகவல் அடிப்படைகளில் (secondary sources) இருந்து பெறப்பட்ட விபரங்கள் மற்றும் தகவல்களில் இருந்து எடுக்கப்பட்ட விடயங்களே பிரதிபலிக்கின்றன. உலகாளவிய ரீதியில் பரந்தளவில் சிறார்களுடன் பணியாற்றும் வலையமைப்பான ஸ்தாபனங்களிடம் இருந்தே தகவல்கள் பெறப்பட்டுள்ளன. குறிப்பான சூழ்நிலைமைகள் தொடர்பான அனுபவமும்/நிபுணத்துவமும் உள்ள பல்புலமைசார் நிபுணர்களினாலேயே ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முழுமையான அறிக்கையிலும் இச் சாராம்சத்திலும் தரப்பட்டுள்ள தகவல்களைப் பெற்றுக்கொண்ட, தகவல் அடிப்படைகள் தொடர்பான விபரங்கள் முழுமையான அறிக்கையின் இறுதியில் அகர வரிசைப்படி நிரைப் படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கரணங்களை முன்னிட்டு சில தகவல் அடிப்படைகள் இங்கு வெளியிடப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையில் உள்ள புகைப்படங்களில காணப்படும் நபர்களேதான் மனித உரிமை மீறல்களுக்கும் வேறுவகையான அத்து மீறல்களுக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள் அல்லது தப்பியவர்கள் என கட்டாயமாக கருதப்பட வேண்டியதில்லை.



Watchlist



Watchlist

2006ம் ஆண்டில் யுத்தத்தின் காரணமாக பாவிக்கப்பட்ட நிலக் கண்ணிகள் மற்றும் வெடி மருந்துகளின் விளைவாக பாதிகப்பட்டவர்களுள் 30 வீதமானவர்கள் சிறார்களேயாவர். இப்பிரதேசங்களில் மிகச் செறிவாக நிலக் கண்ணிகள் பயன்படுத்தப் பட்டிருப்பதனால் அப்பிரதேசங்களுக்கு மனிதாபிமான நிவாரணங்கள் வழங்குவது, பொருளாதார மீள் கட்டுமானங்களைச் செய்வது மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிச் செல்வது என்பன தடுக்கப்பட்டுள்ளன. 2006ம் ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் வன்முறைகள் வெடித்ததன் காரணமாக. கண்ணிவெடிகளை அகற்றும் அமைப்புக்கள் தாம் மேற்கொண்ட பணிகளின் வேகத்தை குறைப்பதற்கு அல்லது முற்றாக நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. சில சம்பவங்களின்போது நிலக் கண்ணிகளை அகற்றும் பணிகளை இராணுவத்தினரே வேண்டுமென்று தடுத்துள்ளனர். புலிகள் இயக்கமானது கிளைமோர் கண்ணிவெடிகள் உட்பட ஏனைய கண்ணிவெடிகளை மீண்டும் பாவிக்கத் தொடங்கியுள்ளதாக அண்மைய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. கிளைமோர் கண்ணிவெடிகள் பாவிக்கப்படும்போது அவை சாதாரண சிவிலியன்களின் மீது மிக கொடூரமான பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லன என்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

## சிறியரக ஆயுதங்கள்

இலங்கையில் நிரந்தரமான சமாதானம் மற்றும் சிறார்களினதும் அவர்கள் சார்ந்த சமூகங்களினதும் மானுடப் பாதுகாப்பு ஆகியன நிலவுவதற்கு தடையாக இருக்கும் மற்றுமொரு காரணி, அங்கு பெருந்தொகையில் புழக்கத்திலிருக்கும் சட்டவிரோத சிறயரக ஆயுதங்களாகும். இலங்கையில் 1 மில்லியன் முதல் 2.4 மில்லியன் வரையான சிறியரக ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பதாக சுதந்திரமான நிபுணர்கள் கணிப்பிட்டுள்ளனர் பெரும்பாலும் அவை சாதாரண பொது மக்களிடமே புழக்கத்தில் உள்ளன. சிறிய ரக ஆயுதங்களின் பெருக்கத்தை இல்லாமல் செய்வதற்கு சர்வதேச ரீதயாக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளுடன் ஊக்கமாக பங்குபற்றுவது என்பது ஒரு புறமிருக்க, இலங்கை அரசாங்கமானது தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களில்கூட சிறிய ரக ஆயுதங்களின் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் எந்தவிதமான முயற்சிகளை எடுப்பதற்கோ அல்லது அதனைக் கண்காணிப்பதற்கான விருப்பத்தையோ கூட காண்பிக்கவில்லை. அதே நேரம் மறுபுறமாக புலிகள் இயக்கமோ கணிசமானளவு சிறியரக ஆயுதங்கள் தொடர்ச்சியாக நாட்டுக்குள் வந்து சேர்வதற்கான செம்மையான திட்டங்களை (network) உறுதியாக நடைமுறைப்படுத்துகின்றனர். அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உட்பட ஏனைய பல நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளில் பயங்கரவாத இயக்கமாக அறிவித்திருப்பதோடு, ஆயுதங்கள் வாங்குவதற்கோ அல்லது வேறு காரணங்களுக்காவோ அவர்கள் நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்கான நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளன.

## சிறார் படையினர்

இலங்கையின் சிறார்களைப் பொறுத்தவரை அவர்கள் அரசாங்கக் கட்டுபாட்டுப் பிரதேசத்தில் இருந்தாலோ அல்லது புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்தாலோ, ஒன்றில் கடத்தப்படுவது அல்லது பலவந்நதமாக படையணிகளில் சேர்க்கப்படுவது போன்ற ஆபத்துகளுக்கு எல்லாவகையிலும் முகம் கொடுத்தே வருகின்றனர். சிறார்கள் பலவந்தமாக படையணிகளில் சேர்க்கப்படுவது தொடர்பான அதிகார பூர்வமான புள்ளிவிபர தகவல் அடிப்படையான யுனிசெப் (UNICEF) இன் அறிக்கைகளின்படி, 2002 ஜனவரி முதல் 2007 டிசம்பர் வரையான காலப்பகுதியில் புலிகள் இயக்கத்தால் பெண் பிள்ளைகள் உட்பட சிறார்கள் பலவந்தமாக படையணிகளில் சேர்க்கப்பட்ட 6,248 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அதேவேளை 2004 ஏப்ரல் முதல் 2007 டிசம்பர் வரையான காலப் பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் ஒத்தாசையுடன் கருணா குழுவினர்/TMVP யினர் பலவந்தமாக சிறார்களை படையணிகளில் சேர்த்த 453 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், யுனிசெப்பானது பெற்றோர்களும் மற்றும் சமூகத்திலுள்ள ஏனையவர்களும் தாமாகவே முன்வந்து வழங்கும் தகவல்களிலேயே பிரதானமாகத் தங்கியுள்ளது, எனவே இச்சம்பவங்கள் தொடர்பான உண்மையான எண்ணிக்கை இதைவிட பலமடங்கு அதிகமாக இருக்கலாமென்றே நம்பப்படுகின்றது.

சிறார்களை பலவந்தமாக படையணிகளில் சேர்க்கும் நடவடிக்கையில் கருணா குழுவினர்/TMVP யினருடன் இலங்கை பாதுகாப்பு படையின் ஒரு பகுதியினரும் செயற்படுகின்றனர் என்கின்ற குற்றச்சாட்டுப்பற்றி விசாரணைகளை மேற்கொள்ளுவதாக இலங்கை அரசாங்கமானது உறுதியளித்திருந்தாலும், இதுவரை இது சம்பந்தமாக எந்த விதமான நம்பத் தகுந்த முழுமையான விசாரணைகளையும் அது மேற்கொள்ளவில்லை. புலிகள் இயக்கமும் கருணா குழுவினர்/TMVP யினரும் இந்தக் குற்றச் செயலை திரும்பத் திரும்பச் செய்யும் குற்றவாளிகளாக ஐ.நா செயலாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஆயுத இயக்கங்களிலிருந்து விலகி பாதுகாப்புத் தேடி இலங்கை அரசாங்கத்திடம் தஞ்சம் புகுந்த அல்லது சரணடைந்த சிறார்களை அவர்களின் குடும்பத்தினருடன் அல்லது சமூகத்துடன் மீளச் சேர்ப்பதற்கான கொள்கையோ திட்டங்களோ எதுவுமே அங்கில்லை. அது மட்டுமன்றி அவர்களின் ஆயுதங்களைக் களைதல், அவர்களை படையணிகளில் இருந்து விலக்குதல், அல்லது குடும்பங்களிடம் மீளச்சேர்த்தல் என்பன தொடர்பாகவும் எந்தவிதமான உத்தியோகபூர்வமான தொடர்நடவடிக்கைகளும் அங்கு இல்லை.

## ஏனைய வன்முறைகளும் ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலமைகளும்

தமது பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான விடயத்தில் இலங்கையின் சிறார்கள் தொடர்ச்சியாகவே, பலவந்தமாக கடத்தப்படுதல், சிறார் தொழிலாளி, விபச்சாரம், அநாதை இல்லங்களில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுதல் உட்பட சட்டவிரோதமான முறையிலும் எழுந்தமானத்திலும் கைது செய்யப்படுதல் பொன்ற இன்னோரன்ன விதமான ஆபத்துக்களுக்கு முகம்கொடுத்தே வருகின்றனர். ஆயுத மோதல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரிருந்தே சிறார்கள் இந்தகைய அவல நிலைக்கு முகங்கொடுத்துக்கொண்டே இருந்தனராயினும், ஆயுத மோதல்களின் காரணமாக அத்தகைய சம்பவங்கள் அதிகரித்திருப்பதையே உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மற்றும் அவர்கள் மீதான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக வொச்லிஸ்ட் அமைப்பானது நேர்மையாக உழைக்கிறது. ஒரு உலகளாவிய வலையமைப்பு என்ற வகையில் வொச்லிஸ்ட் அமைப்பானது, திறன்களையும் வலுவையும் பரஸ்பரம் வளர்த்துக் கொள்வதற்காக உள்ளூரிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச ரீதியான அரச சார்பற்ற அமைப்புக்களுடன் பங்காளி உறவை (partnerships) கட்டி வளர்க்கிறது. இவ்வாறு கூட்டாகப் பணியாற்றுவதன் மூலம், மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் மீதான வன்முறைகள் தொடர்பான தகவல்களை சேகரித்து உலகளாவிய ரீதியில் அவற்றை விநியோகிப்பதன் மூலம், முக்கியமான தீர்மானமெடுக்கும் தரபினர்கள் மீது அழுத்தங்களை இட்டு, சிறார்களின் பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் வகை செய்கிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1261, 1314, 1379, 1460, 1539 மற்றும் 1612 ஆகிய தீர்மானங்கள் என்னும் வரையறைக்குள்ளும், சிறார்களின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் அதன் சட்டவாக்கங்களுக்கும் மற்றும் சர்வதேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான தராதரங்களுக்கும் அமைவாகவே வொச்லிஸ்ட் அமைப்பு தனது பணிகளை மேற்கொள்ளுகிறது.

வொச்லிஸ்ட் அமைப்பின் பணிகள், சிறார்கள் தொடர்பாக பணியாற்றுவதில் பரவலாக அறியப்பட்ட சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களினால் ஆக்கப்பட்ட செயற்குழு ஒன்றினாலேயே பொதுவாக மேற்பார்வை செய்யப்படுகின்றன. இவ்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் இவ்வலையமைப்பிலுள்ள எந்தவொரு குறிப்பிட்ட அமைப்பினதோ அல்லது செயற்குழுவினதோ கருத்தை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை.

**watchlist.org**

## அவசரமான பரிந்துரைகள்

பாதுகாப்பு ஏதுமில்லை தப்புதற்கும் வழியில்லை என்னும் அறிக்கையானது இலங்கை அரசாங்கத்திற்கும், புலிகள் இயக்கத்திற்கும், TMVP/கருணா குழுவினருக்கும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் இலங்கையில் நிறுவப்பட்டிருக்கும் 1612வது செயலணிக்கும் (Task Force), இலங்கையிலுள்ள மனிதாபிமான சமூகத்திற்கும், நிதி வழங்கும் நாடுகளுக்கும், மற்றும் ஏனைய அரசாங்கங்களுக்கும் அவசரமான பரிந்துரைகளைச் செய்கிறது. மிக முக்கியமாக இலங்கையில் உள்ள சகல ஆயுதப் படையினரும், குழுக்களும் சிறார்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் நிறுத்த வேண்டுமெனக் கோருகிறது. இதற்கும் மேலாக, சகல தரப்பினரும் இலங்கையில் உள்ள சிறார்கள் மீது மேலும் அத்துமீறல்கள் நிகழாத வண்ணம் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும், பல தசாப்தங்களாக நிகழ்ந்த ஆயுத மோதல்களின் பலாபலனாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய உதவிகள் கிடைப்பதற்கான ஒத்தாசைகளை வழங்க வேண்டுமெனவும் அது கோருகிறது.

## கீழ் வருவன வொச்லிஸ்ட் அறிக்கையிளுள்ள முக்கிய பரிந்துரைகளாகும்.

- மோதலில் ஈடுபடும் சகல தரப்பினரும், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மதித்து நடப்பதோடு சர்வதேச தராதரங்கள் தொடர்பாக தமது உறுதிப்பாட்டை கடுமையாக கடைப்பிடிப்பதோடு, சிறார்கள் உரிமை தொடர்பான சாசனத்தின் விருப்பிற்குரிய சரத்துக்கள் (Optional Protocols) தொடர்பாக முக்கிய கவனமெடுத்தல் வேண்டும். சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடும் பொறுப்பை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையின் அனுகூலத்துடன் அமைக்கப்படும் சுதந்திரமான சர்வதேச கண்காணிப்பு செயற்பணியொன்றை இலங்கை அரசாங்கமானது ஏற்றுக்கொண்டு அதனுடன் முழுமையாக ஒத்துளைக்கவும் வேண்டும்.

- இலங்கை அரசாங்க அதிகாரத்தில் உள்ளவர்கள், இலங்கை முழுவதுமுள்ள சிறார்களின் கல்விச் சேவைகள், சமூக சேவைகள் மற்றும் சுகாதார சேவைகளில் உள்ள சமச்சீரற்ற நிலைமைகளை நிவர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு, சமூக நல நோக்குடனான செலவினங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் தமது வரவுசெலவு நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும். இலங்கையில் சிறார்களின் உரிமைகளும், பாதுகாப்பும் உறுதிப் படுத்தப்படுவது அரசாங்க நிறுவனங்களின் மிக அத்தியாவசியமான ஒரு அம்சமாகக் கருதி அதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தமது கொள்கைகள் வகுக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

- இலங்கை அரசாங்க அதிகாரத்தில் உள்ளவர்கள், TMVP/கருணா குழுவினரால் சிறார்கள் பலவந்தமாக படையணிகளில் சேர்க்கப்படுதல் அல்லது கடத்தப்படுதல் போன்ற நடவடிக்கைகளுடன் இலங்கை அரசாங்கப் படைகளுக்குள்ள தொடர்புகள் பற்றி முழுமையானதும் நம்பத்தகுந்ததுமான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்வதோடு, அக்குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டரீதியாக அவற்றுக்கு வகைசொல்ல வைத்தலும் வேண்டும்.

- இலங்கை அரசாங்கத்திலும் புலிகள் இயக்கத்திலும் அதிகாரத்தில் உள்ளவர்கள், இலங்கையில் மனிதாபிமானச் செயற்பாட்டாளர்கள் சகல பிரதேசங்களுக்கும் எந்த விதமான தடையுமின்றி சென்று வருவதற்கான பாதுகாப்பை வழங்குவதோடு, அங்கு வாழும் சாதாரண பொது மக்கள் சுதந்திரமாக எந்தத் தடையுமின்றி மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கான நிலைமையை உறுதிசெய்யும் வகையிலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்நடவடிக்கைகளுள், மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்போரைப் பாதுகாத்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை பகிரங்க கவனத்துக்கு கொண்டுவரும் அவர்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குதல் என்பனவும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- புலிகள் இயக்கமானது, சாதாரண பொதுமக்களை பலாத்காரமாக படையணிகளில் சேர்த்தல், குறிப்பாக சிறார்களை படையணிகளில் சேர்த்தல், பலாத்காரமாக வரி அறவிடுதல், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிப் பகுதியில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதை தடுக்கும் முகமாக உள்ளூர் பாஸ் வழங்கும் நடைமுறைகளை உருவாக்குதல் உட்பட சாதாரண பொதுமக்களின் உரிமைகளை மீறுகின்ற வகையில் மேற்கொள்ளும் சகல வன்முறைகளையும் உடன் நிறுத்துதல் வேண்டும்.

- ஐ.நா. பாதுகாப்புச் சபையானது, புலிகள் இயக்கமும், TMVP/கருணா குழுவினரும் சிறார்களை பலாத்காரமாக படையணிகளுக்குச் சேர்த்து அவர்களைப் பயன்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்துவது தொடர்பாக ஒரு குறிப்பிட்டகால வரையறைக்குள் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை அளவுகோல்களை (Benchmark) நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் அவர்களால் திருப்திப் படுத்தப்படாதவிடத்து, பாதுகாப்புச் சபையானது குறிப்பாக அவ்வமைப்புகளை இலக்கு வைத்து, ஆயுதத் தடைகள் மற்றும் பிரயாணத் தடைகள் போன்ற, நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

- ஐ.நா. பாதுகாப்புச் சபையானது, இலங்கையில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் (முழுமையாக பாதிக்கப்படாத பகுதிகள் உட்பட) ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்களின் அவல நிலைமை தொடர்பாகவும், அங்கு நிகழ்தப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் வன்முறைகள், அத்துமீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கும், இப்பிரச்சினை தொடர்பாக இலங்கையில் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடும் அமைப்புக்களின் பணிகள் எனபவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மீளாய்வு செய்து அவற்றின் தொடர் செயற்பாடுகள் பற்றியும், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பரிந்துரைகளை வழங்கக்கூடியதான களநிலை ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக, ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் செயற்குழுவின் பிரதிநிதிகள் அணியொன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

- நிதி வழங்குனர்கள் உட்பட மனிதாபிமான சமூகத்தினர், இலங்கையில் சிறார்களைப் பாதுகாக்கக் கூடியதும் அவர்களுக்கு உதவக்கூடியதும், குறிப்பாக வன்முறைகளுக்கும் பல்வேறு சுரண்டல்களுக்கும் உள்ளாகக்கூடிய முன்னாள் சிறார் போராளிகள், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள், குடும்பங்களைவிட்டுப் பிரிந்து ஆதரவேதும் இல்லாத பிள்ளைகள் மற்றும் பால்நிலை அடிப்படையில் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டு தப்பியவர்கள் போன்ற அதிக ஆபத்தை எதிர் நோக்கக்கூடியவர்களைப் பாதுகாக்கக் கூடியதுமான பல்வேறு வேலைத் திட்டங்களை விரிவுபடுத்தி செயற்படுத்துவதுடன் அவற்றைப் பலப்படுத்தலும் வேண்டும்.

- நிதி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும், இலங்கையில் பரவலாக நிகழும் மனித உரிமை மீறல்கள், மீண்டும் உக்கிரமடைந்துள்ள ஆயுத மோதல்கள் போன்ற நிலைமைகளைக் கணக்கிலெடுத்து அவைதொடர்பாக புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது உட்பட நிதி வழங்குவதற்கான நிபந்தனைகள் என்பவற்றை ஆராய்வதற்காக நிதி வழங்குனர் மாநாடொன்றைக் கூட்ட வேண்டும். மனிதாபிமான ரீதியான கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்படுதலை உறுதிசெய்தல், மற்றும் மனிதாபிமான ரீதியலான முன்முயற்சிகள் உட்பட சாதாரண சிவிலியன்களுக்கான பாதுகாப்பை அதிகரித்தல் என்னும் விடயங்களே அம்மாநாட்டில் முக்கிய விடயங்களாக நோக்கப்படல் வேண்டும். இலங்கை அரசாங்கமானது சமூகநல சேவைகளுக்காக தனது சொந்த நிதி வளத்தை அதிகரித்து அதனை நிலையாக செயற்படுத்த வேண்டுமெனவும் இம்மாநாடானது வலியுறுத்த வேண்டும்.

- இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளர்கள், குறிப்பாக ஐரோப்பிய யூனியன் மற்றும் ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டமைப்பு (APEC) அங்கத்தவர்கள், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களின்படி சிறார்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கும் கடப்பாடுகள் தொடர்பாக அதனை அர்ப்பணிப்புடன் செயற்பட வைப்பதற்குள்ள சகல வழிமுறைகளையும் உறுதியாக பயன்படுத்த வேண்டும்.

**Watchlist on Children and Armed Conflict**
c/o Women's Commission for
Refugee Women and Children
122 East 42nd Street, 11th floor
New York, NY 10168-1289
Phone: 212.551.2941
Fax: 212.551.3180
Email: watchlist@womenscommission.org
அறிக்கையை பார்வையிட: www.watchlist.org

வொச்லிஸ்ட அமைப்புத் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் குறிப்பான அறிக்கைகளைப் பெறுவதற்கும், குறிப்பான மோதல் நிலைமைகளில் அகப்பட்டுள்ள சிறார்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் தயவு செய்து தொடர்பு கொள்க: **watchlist@womenscommission.org**



UNICEF/HQ06-1583/Shehzad Noorani